**Page No.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF - CUM JUDICIAL MAGISTRATE THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC. No.162/**2022**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW2
Defendant :
Court :

Name : பாக்கியம்
Father' s Name : ராமச்சந்திரன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

10.06.2026 CC. No.162/**2022** அ.சா.2 பாக்கியம்

(எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**முதல் விசாரணை:**

1) நான் ஆவரங்காடு கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 1 குணசுந்தரி எனது மனைவி ஆவார். அவர் இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகள் 2 பேரையும் எனக்கு தெரியும். அவர்கள் தான் எனது மனைவியை அடித்தவர்கள் ஆவார்கள். கடந்த 2021 ம் வருடம் தேதி, மாதம் தற்போது ஞாபகமில்லை. எங்கள் இடத்தில் ஆஜர் எதிரிகள் இருவரும் விறகு வெட்டினார்கள். அதை நானும் எனது மனைவி குணசுந்தரியும் எதற்காக விறகு வெட்டுகிறீர்கள் எனக் கேட்டதற்கு புறம்போக்கு இடத்தில் விறகு வெட்டுவதை நீ ஏன்டா கேக்குறாய் என சொல்லி, ஆஜர் எதிரிகள் இருவரும் இரும்பு ராடால் எனது மனைவி குணசுந்தரியை நெற்றியில் அடித்தார்கள். அப்போது மாலை 03.00 மணி இருக்கும்.

2) எனது மனைவிக்கு அந்த இடத்தில் ரத்தம் அதிகமாக வந்தது. நான் என் மனைவியை சிகிச்சைக்காக திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். போலீசார் மேற்படி மருத்துவமனைக்கு வந்து

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.06.10 14:40:41 +0530

விசாரித்தார்கள். எனது மனைவி குணசுந்தரி மேற்படி மருத்துவமனையில் 1 வாரம் சிகிச்சையில் இருந்தார். சாட்சி தற்போது தனது மனைவியை மேல்சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு தான் 1 வாரம் தனது மனைவி சிகிச்சையில் இருந்ததாக கூறுகிறார். சம்பவம் பற்றி எனது மனைவி குணசுந்தரி புகார் கொடுத்தார். அந்த புகாரில் சாட்சியாக உள்ள கையெழுத்து எனது கையெழுத்து தான். **மேற்படி சாட்சி கையெழுத்து அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியாது. எனது மனைவிக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். ஆவரங்காடு கிராமம் எனது பூர்வீக கிராமம் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளையும் எதிரிகளின் குடும்பத்தாரையும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். நான் எனது போலீசார் விசாரணையிலோ எனது முதல் விசாரணையிலோ சம்பவம் நடைபெற்ற நேரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எனது போலீசார் விசாரணையிலோ எனது முதல் விசாரணையிலோ நேரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் எவ்வித சம்பவமும் நடைபெறாததால் தான் நேரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் சரியல்ல.

2) விறகு வெட்டப்பட்டதாக சொல்லப்படும் இடம் எனக்கு பாத்தியப்பட்டது என்பதைக் காட்ட எவ்வித ஆவணமும் நான் எனது போலீசார் விசாரணையில் சமர்பிக்கவில்லை என்றால் மேற்படி இடம் எங்கள் அனுபவத்தில் உள்ள புறம்போக்கு இடமாகும். மேற்படி இடம் எங்களது அனுபவத்தில் இருப்பதைக் காட்ட எவ்வித ஆவணமும் நான் போலீசாரிடம் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி இடத்தில் ஊரணி உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்தில் நான் எவ்வித அரசு அனுமதியும் இன்றி வீடுகட்டியுள்ளேன் என்றால் சரியல்ல நான் மின்சாரம் பெற்றுள்ளேன் வீட்டு வரி ரசீது செலுத்தி வருகிறேன்.

3) நான் மேற்படி இடத்தில் வீடுகட்ட முறையான அனுமதி எதுவும் பெறவில்லை என்றால் நாங்கள் மூன்று தலைமுறையாக அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையில் அங்கே நான் வீடு கட்டினேன். நான் நீர் நிலைகளில் வீடு கட்டியதால் எதிரிகள் தரப்பில் மேற்படி எனது ஆக்கிரமிப்பை அகற்ற அறிவுறுத்தி முதலமைச்சர் தனிபிரிவு உட்பட மாவட்ட ஆட்சியர் வரை புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றது என்றால் சரியல்ல தாசில்தாரிடம் எதிரிகள் மீது நான் தான் புகார் கொடுத்தேன்.

4) நான் கட்டியுள்ள வீட்டை அதிகாரிகள் இடிக்க சொன்னதால் எதிரிகள் மீது பகை கொண்டு எதிரிகள் மீது இந்த பொய்யான புகாரை எனது மனைவி

R VENKADESH PRASANTH Digitally signed by R VENKADESH PRASANTH Date: 2026.06.10 14:40:49 +0530

கொடுத்து அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்ன வார்த்தை சொல்லி திட்டினார்கள் என்பது குறித்து குறிப்பிட்டு எனது மனைவி கொடுத்த புகாரிலோ எனது போலீசார் விசாரணையிலோ எனது நீதிமன்ற முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல நாங்கள் சொல்லியுள்ளோம். வழக்கு விசாரணை, போலீசார் விசாரணைகளில் எனக்கு நன்கு அனுபவம் உள்ளது என்றால் சரிதான்.

5) என் மீது கொலை வழக்குகள், கொலை முயற்சி வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். என் மனைவி மீதும் பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருந்து வந்தது என்றால் சரிதான் அவைகள் அனைத்தும் எதிரிகள் கொடுத்தது ஆகும். என் மீதும் என் மனைவி மீதும் போலீசாரை தாக்கி மிளகாய் பொடி தூவியதாக பழையனூர் காவல் நிலையத்தில் குற்ற எண். 88/2015 ல் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் போலீசாரை நாங்கள் தாக்கவில்லை. மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வருகிற விவரம் உண்மை என்றாலும் நான் இவ்வழக்கிற்காக பொய்யாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் என் மனைவி சொல்லித்தான் தெரியும் என்றாலும் சரிதான்.

6) என் மனைவி கொடுத்த புகாரிலோ எனது போலீசார் விசாரணையிலோ எனது முதல் விசாரணையிலோ எத்தனை ஓடுகள் உடைக்கப்பட்டது என்றோ அதன் மதிப்பு எவ்வளவு என்றோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு மேற்கிலிருந்து வடக்கு வரை எதிரிகளுக்கு சொந்தமான இடம் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற இடத்தில் எதிரிகளுக்கு சொந்தமான வீடு மட்டுமே உள்ளது என்றாலும் சுற்றி வேறு எந்த வீடும் இல்லை என்றாலும் சம்பவத்தின் போது வீடுகள் இருந்தது தற்போது தான் வெளியேறிவிட்டார்கள்.

7) மேற்படி இடங்கள் அனைத்தும் விவசாய நிலங்கள் நிறைந்தது என்றாலும் அதிலிருந்து 1 1/2 கிலோ மீட்டர் தள்ளித்தான் கிராமமே அமைந்துள்ளது என்றாலும் சரிதான் சம்பவ்தின் போது சம்பவ இடத்தைச் சுற்றி 4 வீடுகள் இருந்தது தற்போது தான் வெளியேறிவிட்டார்கள். நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் எந்த காலத்திலும் வீடுகள் இருந்தது இல்லை என்றாலும் அந்த இடத்தில் ரோடு வசதியே இல்லை என்றாலும் சரியல்ல ரோடு வசதி இல்லை ஆனால் வீடுகள் உள்ளது. சம்பவ இடத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் நான் குடியிருக்கும் வீடு உள்ளது என்றால் 1 கிலோ மீட்டர் தள்ளி உள்ளது. சாட்சிப் பட்டியலில் கண்ட போஸ், பாண்டி ஆகியோரின் வீடும் 1 1/2 கிலோ மீட்டர் தள்ளி தான் உள்ளது என்றால் சம்பவ இடத்தின் அருகே மேற்படி நபர்கள்

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.06.10 15:24:05 +0530

விவசாயம் செய்து வந்தார்கள்.

8) சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு தெற்கு திசையில் அர்ஜூனனுக்கு சொந்தமான இடம் உள்ளது என்றால் சரிதான். அதே போல் சம்பவ இடத்திற்கு கீழ்புறம் மற்றும் வடபுறம் முறையே சின்னத்தம்பி, ரமேஷ் ஆகியோருக்கு சொந்தமான வயல்கள் உள்ளது என்றால் சின்னத்தம்பி உள்ளார் ஆனால் ரமேஷ்க்கு சம்பவ இடத்தின் அருகே இடம் ஏதும் இல்லை. எதிரிகள் என்ன படித்துள்ளார்கள் எங்கே வேலை செய்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் எதிரி சசிகுமார் சென்னையில் பணி ஆற்றி வந்தார் என்றால் சரியல்ல அவர் ஊரில் தான் இருந்தார். அதே போல் சம்பவ சமயத்தில் எதிரி ராம்குமார் மதுரை ஸ்ரீராம் பைனான்சில் வேலைப் பார்த்து வந்தார் என்றால் சரியல்ல ஊரில் தான் இருந்தார்கள்.

9) நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவ சமயத்தில் எனது மனைவியின் சித்தப்பா மகன் செந்துூர் பாண்டியன் என்பவர் சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி செய்து வந்தார் என்றால் சரிதான். என் மனைவி கொடுத்த புகாரிலோ அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையிலோ தாலி மற்றும் செல்போன் காணவில்லை என எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி தாலி மற்றும் செல்போன் காணாமல் போகவில்லை என்றாலும் அதனால் தான் புகாரிலோ வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி எனது உறவினர் செந்துூர் பாண்டியனின் அறிவுறுத்தலின் பேரில் பின்னிட்டு இவ்வழக்கில் மாங்கல்யம், செல்போன் காணமல் போனதாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எதிரிகள் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவம் உண்மை இல்லை என்றாலும் அதனால் தான் சம்பவ இடத்தைச் சுற்றியுள்ள 4 நபர்களையும் சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

(**மறுவிசாரணை இல்லை**).

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.06.10 15:24:16 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF -**
**CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC. No.162/**2022**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW3
Defendant :
Court :

| | | |
|---|---|---|
| Name | : | கோவிந்தன் |
| Father' s Name | : | ராமநாதன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

10.06.2026 CC. No.162/**2022** **அ.சா.3 கோவிந்தன்**

(எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**முதல் விசாரணை:**

நான் ஆவரங்காடு கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பகல் 12.00 மணியளவில் நான் எனது வயல் காட்டிற்கு சென்றபோது போலீசார் என்னை நிறுத்தி சண்டை நடந்தது பற்றி விசாரித்தார்கள் எனக்கு தெரியாது என கூறினேன். அப்போது என்னிடம் மேற்கண்ட சாட்சி கையொப்பத்தை வாங்கினார்கள். மற்றபடி வேறு எதுவும் எனக்கு தெரியாது. **மேற்படி பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ் சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

R
VENKADESH
PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.06.10 15:24:29 +0530

செய்ய அனுமதி வழங்கப்பட்டது. )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 27.09.2021 ம் தேதியன்று 14.00 மணியளவில் திருப்பாச்சேத்தி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் மேற்படி காவல் நிலைய குற்ற எண். 211/2021 என்ற வழக்கின் சம்பவ இடத்தை எனது மற்றும் சாட்சி குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும் அதில் நானும் குமார் என்பவரும் கையொப்பம் செய்தோம் என போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.06.10 15:24:37 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.